**கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், கே.ஆர்.நகர், கோவில்பட்டி**
**16-05-2019 அன்று நடைபெற்ற இலட்சுமி அம்மாள் நினைவு கோப்பை**
**பதினொன்றாவது அகில இந்திய ஹாக்கிப் போட்டி - 2019**

**16.05.2019**

கோவில்பட்டி, மே 16:

**முதல் லீக் ஆட்டம் :** கோவில்பட்டி இலட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமி அணி மற்றும் நியூடெல்லி நேஷனல் ஹாக்கி அகாடெமி அணி.

கோவில்பட்டியில் அகில இந்திய ஹாக்கி போட்டி இன்று 16.05.2019 (வியாழக்கிழமை) தொடங்கியது.

கோவில்பட்டி, கே.ஆர்.மருத்துவம் மற்றும் கல்வி அறக்கட்டளையின் சார்பில், கே.ஆர்.கல்வி நிறுவனங்கள், இலட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமியுடன் இணைந்து நடத்தும் பதினொன்றாம் ஆண்டு லட்சுமி அம்மாள் நினைவு சுழற் கோப்பைக்கான அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் 16ம் தேதி முதல் மே 26ம் தேதி வரை கோவில்பட்டி செயற்கை புல்வெளி மைதானத்தில் பகல் இரவு ஆட்டமாக மின்னொளியில் நடைபெற்று வருகிறது.

11 நாட்கள் நடைபெறும் அகில இந்திய ஹாக்கிப் போட்டிகள் பல்வேறு மாநிலங்களில் இருந்து 16 தலை சிறந்த அணிகள் பங்கேற்று விளையாடி வருகின்றனர். கனரா வங்கி - பெங்களூர், ஈஸ்ட் கோஸ்ட் ரயில்வே - புவனேஷ்வர், தமிழ்நாடு போலீஸ் - சென்னை, பெங்களூரு ஹாக்கி அசோசியேஷன்ஸ் - பெங்களூர், ஆல் இந்தியா கஸ்டம்ஸ் & ஜிஎஸ்டி - மும்பை, சாய் - சென்னை, இந்தியன் பேங்க் - சென்னை, சவுத் சென்ட்ரல் ரயில்வே - செகந்தராபாத், ஹாக்கி கூர்க் - கர்நாடகா, பிஇஜி & சென்டர் கிர்கீ ஹாக்கி - புனே, ஐசிஎப் - சென்னை, சிஜஎஸ்எப் - சண்டிகர், யூனியன் வங்கி - மும்பை, நேஷனல் ஹாக்கி அகாடமி - நியூடெல்லி, தெற்கு இரயில்வே - சென்னை மற்றும் லட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடெமி - கோவில்பட்டி, ஆகிய அணிகள் கலந்து கொண்டு விளையாடுகின்றன.

இப்போட்டிகள் கால் இறுதி ஆட்டம் வரை லீக் முறையிலும், அரை இறுதி மற்றும் இறுதி போட்டிகள் அனைத்தும் நாக் அவுட் முறையிலும் நடைபெறுகிறது.

**போட்டிகள் நடந்த விவரம்:** துவக்கவிழாவான இன்று (வியாழக்கிழமை) மாலை 4.30 மணியளவில் நடந்த முதல் லீக் போட்டியில் கோவில்பட்டி இலட்சுமி அம்மாள் ஸ்போர்ட்ஸ் அகாடமி அணி, நியூடெல்லி நேஷனல் ஹாக்கி அகாடெமி அணியினை எதிர்த்து விளையாடினர்.

**இதில் 3:0 என்ற கோல் கணக்கில் நியூடெல்லி நேஷனல் ஹாக்கி அகாடெமி அணி வெற்றிப் பெற்றது.**

11-வது நிமிடத்தில் நியூடெல்லி நேஷனல் ஹாக்கி அணி வீரர் தில்ஜீத்சிங் ஒரு பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

28-வது நிமிடத்தில் நியூடெல்லி நேஷனல் ஹாக்கி அகாடமி அணி வீரர் தில்ஜீத்சிங் ஒரு பீல்டு கோல் போட்டார்.

40-வது நிமிடத்தில் நியூடெல்லி நேஷனல் ஹாக்கி அகாடமி அணி வீரர் பங்கஜ் ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. சாஹில் அகமது மற்றும் திரு. மால்ஹைட் சிங் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர் : **தில்ஜீத்சிங்,** நேஷனல் ஹாக்கி அகாடமி அணி, நியூடெல்லி.

(Refer Photo - LASA2019_16052019_LEAGUE_1_Photo)

**2வது லீக் ஆட்டத்தில் சென்னை தமிழ்நாடு போலீஸ் அணியுடன் பெங்களுர் கனரா வங்கி அணி இன்று மாலை 6.30 மணியளவில் மோதியது.**

**இதில் 4:1 என்ற கோல் கணக்கில் பெங்களுர் கனரா வங்கி அணி வெற்றிப் பெற்றது.**

04-வது நிமிடத்தில் பெங்களுர் கனரா வங்கி அணி வீரர் பிரதான் சோமனா ஒரு பீல்டு கோல் போட்டார்.

06-வது நிமிடத்தில் பெங்களுர் கனரா வங்கி அணி வீரர் திக்ஷிட் ஒரு பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

11-வது நிமிடத்தில் பெங்களுர் கனரா வங்கி அணி வீரர் பிரதான் சோமனா ஒரு பீல்டு கோல் போட்டார்.

35-வது நிமிடத்தில் சென்னை தமிழ்நாடு போலீஸ் அணி வீரர் கில்லிவளன் ஒரு பெனாலிட்டி ஸ்டோக் முறையில் ஒரு கோல் போட்டார்.

54-வது நிமிடத்தில் பெங்களுர் கனரா வங்கி அணி வீரர் பிரதான் சோமனா ஒரு பீல்டு கோல் போட்டார்.

திரு. சாஹில் அகமது மற்றும் திரு. அமித் சயினி ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர் : **பிரதான் சோமனா,** கனரா வங்கி அணி, பெங்களூர்.

(Refer Photo - LASA2019_16052019_LEAGUE_2_Photo)

**மேலும் 3வது லீக் ஆட்டத்தில் கர்நாடகா ஹாக்கி கூர்க் அணியுடன் சென்னை ஐ.சி.எப்.அணி இன்று இரவு 8.30 மணியளவில் மோதியது.**

**இதில் 3:1 என்ற கோல் கணக்கில் சென்னை ஐ.சி.எப் அணி வெற்றிப் பெற்றது.**

13-வது நிமிடத்தில் சென்னை ஐ.சி.எப்.அணி வீரர் பிரிதீவி ஒரு பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

23-வது நிமிடத்தில் சென்னை ஐ.சி.எப்.அணி வீரர் ஷியாம்குமார் ஒரு பெனாலிட்டி ஸ்டோக் முறையில் ஒரு கோல் போட்டார்.

25-வது நிமிடத்தில் கர்நாடகா ஹாக்கி கூர்க் அணி வீரர் மச்சய்யா ஒரு பீல்டு கோல் போட்டார்.

48-வது நிமிடத்தில் சென்னை ஐ.சி.எப்.அணி வீரர் பிரிதீவி ஒரு பெனாலிட்டி கார்னர் முறையில் ஒரு கோல் போட்டார்.

திரு. சுரேஷ்குமார் மற்றும் திரு. மல்ஹைட் சிங் ஆகியோர் நடுவர்களாக செயல்பட்டனர்.

சிறந்த ஆட்டக்காரர் : **ரமேஷ்,** ஐ.சி.எப்., சென்னை.

(Refer Photo - LASA2019_16052019_LEAGUE_3_Photo)

**நாளை நடைபெறும் (17.05.2019) போட்டியின் விவரம்**

1. யூனியன் வங்கி, மும்பை மற்றும் தெற்கு ரயில்வே சென்னை (மாலை 4.30)
2. ஹாக்கி பெங்களூரு, பெங்களூர் மற்றும் சாய், சென்னை (மாலை 6.30)
3. சிஏஎஸ்எப், சண்டிகர் மற்றும் கனரா வங்கி, பெங்களூர் (இரவு 8.30)